# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 16.08.2018

## தமிழக நிகழ்வுகள்

- பள்ளி மாணவிகள், பள்ளிகளில் தங்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் குறித்து புகார் தெரிவிக்க 14417 என்ற இலவச தொலைபேசி எண்ணை தமிழக பள்ளிக் கல்விதுறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
    - இந்த எண் மூலம் கொடுக்கப்படும் புகார்கள் மீது 24 மணி நேரத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படும், இத்திட்டம் ஆகஸ்ட் 15 முதல் செயல்முறைக்கு வந்துள்ளது.

- சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழக அரசு சார்பில் பல்வேறு பிரிவுகளில் சிறப்பானவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளில் சிறந்த மாநகராட்சியாக திருப்பூர் மாநகராட்சி தேர்வு செய்யப்பட்டுள்ளது. சிறந்த நகராட்சியாக கோவில்பட்டியும், சிறந்த பேரூராட்சியாக சேலம் மாவட்டம் ஜலகண்ட்புரம் பேரூராட்சியும் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
    - தமிழக அரசின் சிறந்த துறைக்கான விருதில் பதிவுத் துறை முதல் இடத்தையும், உணவுத் துறை 2வது இடத்தையும், சுகாதாரத் துறை 3வது இடத்தையும் பிடித்துள்ளது.
    - துணிவு மற்றும் சாகசத்துக்காக வழங்கப்படும் கல்பனா சாவ்லா விருது, கோவை மாவட்டம் வால்பாறையைச் சேர்ந்த ‘ஐ. முத்துமாரி’ என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
    - அப்துல்கலாம் விருது, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வரும் வான்வெளி ஆராய்ச்சி குழுவான ‘தஷ்வா’ குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- இந்தியாவின் நாட்டுப்பற்று மிக்க பிராண்டுகளின் பட்டியலில்,

ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி, இந்தியாவின் அதிக நாட்டுப்பற்று மிக்க (Most Patriotic brand) பிராண்டாக தேர்வு செய்யப்பட்டள்ளது.

- டாடா மோட்டார்ஸ் 2-ம் இடத்திலும், பதஞ்சலி நிறுவனம் 3ம் இடத்திலும் உள்ளது.

- வனவிலங்கு பாதுகாப்புக்கான, இந்தியாவின் முதல் மரபணு வங்கி ஹைதராபாத் நகரில் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சம் அமைந்துள்ளது. (India's First genetic bank for wildlife conservation) ஹைதராபாத்தில் உள்ள CSIR – செல் மற்றும் மூலக்கூறு உயிரியல் (CCMB), அழிந்து வரும் உயிரினங்களின் பாதுகாப்பு ஆய்வகத்தில் (LaCONES), இந்த வங்கி தொடங்கப்பட்டுள்ளது.
  - LaCONES ; Laboratory for Conservation of Endangered Species
  - CCMB : CSIR – Centre for cellular and molecular Biology

- ஸ்வாட் (SWAT – Special Weapons and Tactics) என்று அழைக்கப்படும் சிறப்பு ஆயுதங்கள் மற்றும் தந்திரோபாயங்கள் கொண்ட குழுவானது, அமெரிக்காவின் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் புகழ்பெற்றது.
  - இந்தியாவில் பெண்களுக்கான ஸ்வாட் குழுவானது முதன் முதலாக டெல்லியில் தனது பணியைத் தொடங்கியுள்ளது.

- உலகிலேயே மிகப் பெரிய மருத்துவ காப்பீடு திட்டமான ஆயுஷ்மான் பாரத் சுகாதாரத் திட்டம் செப்டம்பர் 25ம் தேதி, 2018 முதல் தொடங்கப்படும் என பிரதமர் அறிவித்துள்ளார்.
  - பிரதன் மந்திரி ஜன் ஆராக்ய யோஜனா என்ற திட்டத்தின் கீழ் செயல்படும் இத்திட்டமானது, நாட்டில் உள்ள ஏழைக் குடும்பங்களுக்கு (சுமார் 10 கோடி ஏழைக் குடும்பங்கள்), ஆண்டுதோறும் 5 லட்சம் மருத்துவக் காப்பீடு வழங்கும்.

- மாற்றத்திற்கான இந்தியா – பிரச்சாரம் - மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறையானது, மத்திய அரசின் சாதனைகளை மக்களிடையே எடுத்துச் செல்ல மாற்றத்திற்கான இந்தியா என்ற பெயரில் பிரச்சாரத்தை தொடங்கியுள்ளது.



We Shine Academy TM

## விளையாட்டு செய்திகள்

- ரோஜர்ஸ் கோப்பை டென்னீஸ் போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் உலக தரவரிசையில் முதலிடத்தில் உள்ள ருமேனியா நாட்டைச் சேர்ந்த சிமோனோ ஹலேப், அமெரிக்காவின் ஸ்லோனே ஸ்டீபன்சை வென்று சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

## நியமனங்கள்

- சத்தீஸ்கர் மாநில ஆளுநராக பதவி வகித்து வந்த பலராம்ஜி தாஸ் டாண்டன், ஆகஸ்ட் 14 ஆனது காலமானதைத் தொடர்ந்து, மத்திய பிரதேச ஆளுநரான ஆனத்தி பென் படேல், சத்தீஸ்கர் ஆளுநராக (கூடுதல் பொறுப்பு) பொறுப்பேற்றுள்ளார்.
    - சத்தீஸ்கர் உயர்நீதிமன்ற நீதிபதி அஜய் குமார் திரிபாதி ஆனந்தி படேல்க்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்துள்ளளார்.

We Shine Academy